செ.வெ.எண் : 125 நாள் : 6.2.2010

# தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்

## செய்தி வெளியீடு – 6–2–2010

காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன் அவர்களின் இல்லம் இடிக்கப்பட்டதாக ஏடுகளில் பெரிதாக செய்தி வந்துள்ளது குறித்து பின்வரும் விளக்கம் அளிக்கப்படுகிறது.

அரசு அலுவலர்களுக்கும், நடுத்தர, ஏழை மக்களுக்கும் வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் திரு. நா. வெங்கடேசனுக்குச் சொந்தமான கொட்டிவாக்கம் கிராமத்தில் உள்ள 10.33 ஏக்கர் நிலத்தை நில ஆர்ஜிதம் செய்ய 1975ஆம் ஆண்டு நடவடிக்கை எடுத்தது. அதனை எதிர்த்து நில உரிமையாளர் சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க – அந்த வழக்கில் ஆறு ஏக்கர் நிலம் நில உரிமையாளரால் ஏற்கனவே “பிளாட்” போட்டு விற்கப்பட்டு விட்டதால், அதனை நீக்கி விட்டு மீதமுள்ள 4.33 ஏக்கர் நிலத்தை வீட்டு வசதி வாரியம் நில ஆர்ஜிதம் செய்து கொள்ள தீர்ப்பளித்தது. அதன்படி நில ஆர்ஜித நடவடிக்கைகள் 10–2–1988இல் முடிவுற்று நிலத்திற்கான கிரயத் தொகையை நில உரிமையாளர் பெற மறுத்து விட்டதால் நீதி மன்றத்தில் அந்தத் தொகை டெபாசிட் செய்யப்பட்டது. நில ஆர்ஜித நடவடிக்கையை எதிர்த்து நில உரிமையாளர் உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த வழக்கில் 31–3–2004 அன்று தீர்ப்பு கூறப்பட்டது. அந்தத் தீர்ப்பில் “தற்போது இந்த மேல்முறையீட்டாளருக்கு (நில உரிமையாளர்) தான் குடியிருந்து வந்த இடத்தை தவிர வேறு ஏதும் குடியிருக்க இடம் இல்லை எனத் தெரிவித்துள்ளார். இருப்பினும் இந்தக் குடியிருப்பு பகுதி வீட்டு வசதி வாரிய நிலத்தின் நடுவில் அமைந்துள்ளது. எனவே இப்பகுதியை மனுதாரர் தக்க வைத்துக் கொள்ள அனுமதி வழங்க இயலாது. மேலும், தனது நிலத்தின் ஒரு பகுதியில் இடத்தின் உரிமையாளர் 4 கிரவுண்ட் பரப்பளவில் “பங்களா” ஒன்றைக் கட்டிக் கொண்டிருக்கிறார். இந்த நீதி மன்றம் தீர்ப்பு வழங்குகின்ற

நாளில் இருந்து ஓராண்டு காலத்திற்குள் அந்தப் பங்களாவைக் கட்டி முடித்து அங்கே குடி பெயர வேண்டுமென்றும், ஓராண்டு காலத்திற்குள் தற்போது வசிக்கும் வீட்டை காலி யாக வைத்திருந்து அமைதியான முறையில் வீட்டு வசதி வாரியத்திற்கு ஒப்படைப்பேன் என ஓர் உறுதிமொழி ஆவணத்தை நீதி மன்றத்தில் தாக்கல் செய்யும் நிலையில் மேல் முறையீட்டாளர் அந்தப் பழைய இல்லத்தில் ஓராண்டு காலம் வசிக்க அனுமதிக்கப்படலாம்" என்று சொல்லப்பட்டிருந்தது.

அதற்கிணங்க நில உரிமையாளரும் உறுதி மொழி ஆவணத்தை உச்ச நீதி மன்றத்தில் பதிவு செய்துள்ளார். மேலும் நில உரிமையாளர் உச்ச நீதி மன்றத்தில் மறு ஆய்வு மனு ஒன்றையும் பதிவு செய்து, அந்த மனுவும் உச்ச நீதி மன்றத்தால் 9–8–2005இல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. இதற்குப் பிறகு, நில ஆர்ஜிதம் செய்யப்படவிருந்த 4.33 ஏக்கர் நிலத்தில் இரண்டு சிறிய பகுதிகள் மூன்று நபர்களுக்கு விற்கப்பட்டு, அந்த மூன்று நபர்களும் நில எடுப்பு நடவடிக்கையிலிருந்து தங்களது நிலங்களை விலக்களிக்க சென்னை உயர் நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தனர். அதன் அடிப்படையில் மனுதாரர்களின் விலக்களிப்பு கோரிக்கை அரசினால் நிராகரிக்கப்பட்டு விட்டது. உயர்நீதி மன்றமும், உச்ச நீதி மன்றமும் நில ஆர்ஜித நடவடிக்கைக்கு எதிராக தீர்ப்பு அளிக்காத நிலையில் தமிழக அரசினால் அந்தத் தீர்ப்புக்கு மாறாக நடந்திட வாய்ப்பு இல்லை.

இந்திய உச்ச நீதி மன்றத் தீர்ப்பின்படி திரு. வெங்கடேசன் தன்னுடைய நிலத்தை தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் ஒப்படைக்காத காரணத்தால் – வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுக்க முனைந்த போது – அந்த இடத்தின் உரிமையாளர் அரசை அணுகி, தங்கள் வீட்டில் திருமணம் நடைபெறவிருப்பதாகவும், அதுவரை வீட்டு வசதி வாரியம் நடவடிக்கை எடுக்காமல் இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு அதுவும் ஏற்கப்பட்டு விட்டது. திருமணம் முடிந்த நிலையில் வீட்டு வசதி வாரியம் உச்ச நீதி மன்றத் தீர்ப்பின்படி, அவர் வசிக்கும் வீட்டிற்கு எந்தவிதமான பாதகமும் இல்லாத வகையில் தான் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளது. முறைப்படி நில

ஆர்ஜிதத்திற்கு உட்பட்ட காம்பவுண்ட் சுவர்கள் – அவர் ஏற்கனவே வசித்து வந்த இடம் போன்றவற்றின் மீது தான் நடவடிக்கை எடுக்கப் படுகிறது. நேற்றையதினம் வீட்டு வசதி வாரியம் எடுத்த நடவடிக்கைக்கு தடையாணை பிறப்பிக்க வேண்டுமென்று உயர் நீதி மன்றத்தில் முறையீடு செய்தும், நீதி மன்றம் தடையாணை வழங்க மறுத்து விட்டது.

DISTRICT REVENUE OFFICER
ON OTHER DUTY AS
CHIEF REVENUE OFFICER
TAMIL NADU HOUSING BOARD
NANDANAM, CHENNAI-35

............................................................................................................

3/3

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை -9